கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திருமதி.சாந்தி செழியன்,பி.ஏ.,எம்.எல்., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,பழனி.

2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.01/2018.

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,பழனி. |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 13/2010. |
| மேல்முறையீட்டாளர்களின் பெயர்கள் | 1. கருப்பணன் த.பெ.நடராஜ்பிள்ளை, பாப்பம்பட்டி. பழனி வட்டம்.<br>2.துரையன் (எ) ராமசாமி த.பெ.நடராஜ்பிள்ளை, எலையம்புத்தூர், உடுமலைப் பேட்டை வட்டம்.<br>3.காளிதாஜ் த.பெ.நடராஜ்பிள்ளை, பாப்பம்பட்டி. பழனி வட்டம்.<br>4.ரேவதி க.பெ.காளிதாஸ், பாப்பம்பட்டி, பழனி வட்டம்.<br>5.கல்யாணி க.பெ.துரையன் (எ) ராமசாமி, பாப்பம்பட்டி,பழனி வட்டம்.<br>6.சரோஜா க.பெ.கருப்பணன், பாப்பம்பட்டி, பழனி தாலுகா. |
| எதிர்மேல்முறையீட்டாளர் பெயர் | ஆய்வாளர், பழனி தாலுகா காவல் நிலையம், கு.எண்.542/2006. |
| கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு | முடிவாக, 1ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 147,325-ன் கீழ் குற்றவாளி என்றும், 2 முதல் 6 எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 147,341-ன் கீழ் குற்றவாளி என்றும் முடிவு செய்து 1ம் எதிரிக்கு இ.தச..பிரிவு 325-ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டணையும் அபராதம் ரூ,500-00ம் கட்டத்தவறினால் ஒரு மாதம் கடுங்கால் சிறைத்தண்டணையும், 1 முதல் 6 எதிரிகளுக்கு இ.தச.பிரிவு 147-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.500-00ம் கட்டத்தவறினால் தலா ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டணையும், 2 முதல் 6 எதிரிகளுக்கு இ.த.ச.பிரிவு 341-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.200-00ம் கட்டத்தவறினால் தலா இரண்டு வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டணை விதித்தும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரி இ.த.ச.பிரிவு 506(1)-ன் கீழும், 2,3 எதிரிகள் இ.த.ச.பிரிவு 323-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து அவர்களை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 1ம் |

| | |
|---|---|
| | எதிரி கடந்த 13-12-2006 முதல் 21-12-2006 வரை சிறையிலிருந்த காலத்தை கு.வி.மு.ச.பிரிவு 428-ன் கீழ் தண்டனை காலத்திலிருந்து கழிக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டதா? / மாற்றி அமைக்கப்பட்டதா?/ அவ்வாறெனில் அதன் விவரம். | முடிவாக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு விசாரணை நீதிமன்றம் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.13/2010 வழக்கில் 16-12-2017 ஆம் தேதியன்று வழங்கியுள்ள தீர்ப்பும், தண்டணையும் நீக்கறவு செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. 1ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 147,325-ன் கீழும், 2 முதல் 6 எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 147,341-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து அவர்களை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 6 எதிரிகள் விசாரணை நீதிமன்றத்தில் செலுத்தியுள்ள அபராதத் தொகையை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அவர்களுக்கு திருப்பி கொடுக்கவும் உத்தரவிடப்படுகிறது. |
| இம்மேல்முறையீடு திண்டுக்கல் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு வந்த நாள் | 08-01-2018 |
| திண்டுக்கல் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்த நாள் | 11-01-2018 |
| இம்மேல்முறையீடு இந்நீதிமன்றத்திற்கு வந்த நாள் | 23-01-2018 |
| வாதுரை கேட்ட நாள் | 12-09-2018 |
| தீர்ப்பு நாள் | 05-10-2018 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்னர் 12-09-2018 ஆம் நாளன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.ஆர்.செல்வராஜ், திரு.எல்.கதிரவன், திரு.பி.சங்கர் குரு, திரு.எம்.கணேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் பழனி அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் திரு.எ.கணேசமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

1. பழனி விரைவு நீதிமன்றம் (குற்றவியல் நடுவர் நிலை) ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.

13/2010-ல் 16-12-2017 ஆம் தேதியன்று பிறப்பித்த தீர்ப்பில் குறையுற்ற எதிரியால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பழனி தாலுகா காவல் துறையினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

கடந்த 11-12-2006 ஆம் தேதியன்று மாலை அ.சா.1 ராஜேந்திரன் பாப்பம்பட்டி சென்று துக்கம் விசாரித:து விட்டு பின்பு அவரது சித்தி சரஸ்வதி வீட்டுக்கு சென்று சரஸ்வதியுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு இரவு சுமார் 8.30 மணிக்கு புறப்படும் போது பக்கத்து மாட்டு தொழுவத்தில் நின்று கொண்டிருந்த அ.சா.1ன் மாமா கருப்பணன் என்பவர் ஏற்கனவே வீட்டு இடப்பிரச்சினை சம்பந்தமான முன் விரோதத்தை மனதில் வைத்து அ.சா.1-யை பார்த்து நீ ஏண்டா இங்கு வந்தாய் எங்களை பத்தி தானே பேசுகிறாய் என்று கூறி கட்டையை தூக்கிக் கொண்டு அ.சா.1-யை அடிக்க ஓடி வந்தபோது அவருடன் துரையன், காளிதாஸ்,ரேவதி, கல்யாணி, சரோஜா ஆகியோர் வந்து அ.சா.1-யை வழிமறிக்க கருப்பன் தான் வைத்திருந்த கட்டையால் இத்தோடு தொலைந்து போ என்று அச.ா.1-ன் வலது காலில் ஓங்கி அடித்ததில் அ.சா.1-ன் வலது கெண்டைக்கால் ஒடிந்து விட்டதாகவும், தடுத்த அச.ா.1-ன் சித்தியை தள்ளி விட்டு விட்டு துரையன், காளிதாஸ் ஆகியோர் கையால் அ.சா.1-ன் உடம்பில் மாறி மாறி பல இடங்களில் அடித்து ஊமைக்காயம் உண்டுபண்ணி விட்டதாகவும், இந்த சம்பவம் பக்கத்து வீட்டு சுமதி, பச்சையம்மாள், நாச்சமம்மாள், மயில்சாமி, கோபால் இவர்களுக்கு தெரியும் என்றும், பின்பு விவரத்தை அச.ா.1 உடுமலையில் உள்ள அவரது தங்கை கணவர் ஆறுமுகத்திடம் போனில் சொன்னதாகவும், பின்பு தன்னை காரில் பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தனர் என்றும், அங்கிருந்து இரவு 10-40 மணிக்கு அங்கிருந்து மேல்சிகிச்சைக்கு மதுரைக்கு அனுப்பியதாகவும், ஆனால் அ.சா.1 உடுமலை வந்து தங்கி பின்பு கோவை கங்கா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும் எனவே தன்னை தாக்கிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி 12-12-2006 ஆம் தேதியன்று பிற்பகல் 3-00 மணிக்கு கொடுதத அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1-யை அ.சா.9 திரு.பழனிச்சாமி, பழனி தாலுகா காவல் நிலைய தலைமைக்காவலர் பெற்று பழனி தாலுகா காவல் சார்பு ஆய்வாளர் திரு.மருதமுத்து அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலத்தை அ.சா.12 பழனி தாலுகா காவல் சார்பு ஆய்வாளர் திரு.மருதமுத்து பார்வையிட்டு அன்றையதினம் மாலை 7-00 மணிக்கு நிலையம் வந்து இவ்வழக்கின் எதிரிகளான கருப்பணன் மற்றும் ஐந்து நபர்கள் மீது பழனி தாலுகா காவல் நிலைய குற்ற எண். 542-2006 இ.த.ச.பிரிவுகள் 147,341,323,325 மற்றும் 506(1)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ,6-யை பதிவு செய்துள்ளார்.

அ.சா.12 திரு.மருதமுத்து, விசாரணை அதிகாரி 12-12-2006 ஆம் தேதியன்று இரவு 9.30 மணிக்கு சம்பவ இடத்தினை சாட்சிகள் அ.சா.7, அ.சா.8 ஆகியோர் முன்னியையில் பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ,8, வரைபடம் அ.சா.ஆ,7 தயாரித்து அதில் அ.சா.7,8விடம் சாட்சிக் கையெழுத்து பெற்றுள்ளார். பின்பு அ.சா.12 இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். 13-12-2006 ஆம் தேதியன்று அ.சா.12 இவ்வழக்கின் 1,2,3 எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். பின்பு 12-01-2007 ஆம் தேதியன்று இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்து அ.சா.ஆ,5 காயச்சான்றிதழ் பெற்று இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 147,341,323,325,506(1)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

3. விசாரணை நீதிமன்றம் எதிரிகளுக்கு இந்த குற்ற வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச.பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 147,325,506(1)-ன் கீழும், 2,3 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 147,341,32-ன் கீழும், 4 முதல் 6 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 147,341-ன் கீழும் குற்றச்சாட்டுக்களை வனைந்து குற்றத்தின் தன்மை பற்றி தமிழில் விளக்கி வினவியபோதும் எதிரிகள் அனைவரும் அவரவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்ததால் விசாரணை நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிட்டதன் பேரில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. விசாரணை நீதிமன்றம் இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், அரசு தரப்பு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து 1ம் எதிரி மீதான 147,325-ன் கீழான குற்றச்சாட்டுக்களும், 2 முதல் 6 எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவுகள் 147,341-ன் கீழான குற்றச்சாட்டுக்களும் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளது என்று தீர்மானித்து 1ம் எதிரிக்கு இ.தச..பிரிவு 325-ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டனையும் அபராதம் ரூ,500-00ம் கட்டத்தவறினால் ஒரு மாதம் கடுங்கால் சிறைத்தண்டனையும், 1 முதல் 6 எதிரிகளுக்கு இ.தச.பிரிவு 147-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.500-00ம் கட்டத்தவறினால் தலா ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனையும், 2 முதல் 6 எதிரிகளுக்கு இ.த.ச.பிரிவு 341-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.200-00ம் கட்டத்தவறினால் தலா இரண்டு வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும்

தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரி இ.த.ச.பிரிவு 506(1)-ன் கீழம், 2,3 எதிரிகள் இ.த.ச.பிரிவு 323-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து அவர்களை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது. 1ம் எதிரி கடந்த 13-12-2006 முதல் 21-12-2006 வரை சிறையிலிருந்த காலத்தை கு.வி.மு.ச.பிரிவு 428-ன் கீழ் தண்டணை காலத்திலிருந்து கழிக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. எதிரிகள்/மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டின் சுருக்கம்:

விசாரணை நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் சரியாக பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்க தவறி விட்டது. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறி விட்டது. அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் மோட்டார் வாகன விபத்தில் அவருக்கு காயங்கள் ஏற்பட்டதாக அவர் கோவை கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது சொல்லியிருக்கும் விவரத்தை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள தவறி விட்டது. அ.சா.1-ன் காயத்திற்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் திரு.புஷ்பசேகர் என்பவர் அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. காயம்பட்ட நபருக்கு வழங்கப்பட்ட நுண்கதிர் அறிக்கையில் கண்டுள்ள விவரங்களை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. மேலும் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட தண்டணை மிகவும் அதிகமானதாகும். எனவே விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தண்டணையை நீக்கறவு செய்து இந்த மேல்முறையீட்டினை அனுமதிக்க வேண்டும்.

5. இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைகள் யாதெனில்:

1. இந்த மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளத்தக்கது தானா?
2. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தண்டணையும் சரியானது தானா?

6. <u>பிரச்சினை எண்.1:</u>

இந்த மேல்முறையீட்டில் தரப்பினர்கள் சி.சி.எண்.13-2010ல் உள்ளவாறே அழைக்கப்படுவார்கள். எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கத் தவறி விட்டது என்றும், அ.சா.1-க்கு சிகிச்சையளித்த மருத்துவர் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும், அ.சா.1-க்கு X-Ray எடுத்த Radiologist அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றும் எடுத்துரைத்து எனவே இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும்,

தண்டணையும் நீக்கறவு செய்யப்பட வேண்டும் என எடுத்துரைத்தார்.

7. அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரகு தரப்பில் தக்க சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக நிரூபிக்கப்பட்டிருப்ப தால், இந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தண்டணையும் உறுதி செய்யப்பட வேண்டும் என எடுத்துரைத்தார்.

8. இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த வழக்கில் காயமடைந்த நபரான அ.சா.1 மற்றும் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக சேர்த்த அ.சா.3 ஆகிய இருவரும் தங்களின் சாட்சியத்தில் அ.சா.1 காயமடைந்த பின்பு முதலில் அவரை பழனி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு அவருக்கு முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக மதுரைக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும், ஆனால் மறுநாள் தான் அவர் கோவை கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அ.சா.3, பழனி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட சான்றிதழை வைத்து தான் அச.ா.1-யை தான் கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையில் அனுமதித்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அரசு தரப்பில் அ.சா.1-க்கு பழனி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் முற்படுத்தப்படவில்லை. பழனி அரசு மருத்துவமனையில் அ.சா.1-க்கு சிகிச்சையளித்த மருத்துவரும் அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையின் போது தான் பழனி அரசு மருத்துவமனையிலிருந்த போது ஒரு தலைமைக் காவலர் வந்து தங்களை விசாரித்து விலாசம் எழுதிக் கொண்டதாகவும், அன்றையதினம் இரவே தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அவ்வாறு புகார் கொடுத்த பின்பு தான் கோயம்புத்தூருக்கு சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 கொடுத்ததாக கூறப்படும் புகார் அரசு தரப்பில் முற்படுத்தப்படவில்லை. இந்த சம்பவம் குறித்த முதல் பதிவான பழனி அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டு நகலும் முதல் புகாரான அ.சா.3-ன் புகாரும் அரசு தரப்பில் மறைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட செயலானது அரசு தரப்பபு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையின் போது பழனி அரசு மருத்துவமனையில் அறிவுறுத்தப்பட்டபடி தான் மதுரைக்கு செல்லாமல் கோயம்புத்தூருக்கு சென்று விட்டதாகவும், மறுநாள் 12-10-2006 அன்று மதியம் தான் கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அந்த இடைப்பட்ட நேரம் அதாவது 11-10-2006 அன்று இரவு முதல் மறுநாள் 12-10-2006ம் தேதியன்று பிற்பகல் 1-00 மணி வரையிலும் என்ன நிகழ்வுகள் நடந்தன என்பது குறித்து அரசு

தரப்பில் எதுவும் எடுத்துரைக்கப்படவில்லை. விசாரணை நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளபடி அ.சா.1-யை தாக்க பயன்படுத்தப்பட்ட கட்டை அரசு தரப்பால் கைப்பற்றப்படவில்லை. இந்த வழக்கின் தனி நபர் சாட்சிகளான அ.சா.4,5,6,7 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். மேலும், பார்வை மகசரான அ.சா,ஆ.8-ல் சம்பவ இடத்தில் எதிரிகள் விட்டுச் சென்ற தடயங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவத்தில் காயம் அடைந்த அ.சா.1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ஆகியோரின் சாட்சியம் ஒருவருக்கொருவர் முரண்பட்டதாக உள்ளது. அ.சா.1 தன்னை 1ம் எதிரி கட்டையால் தாக்கியதாக தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவரது சித்தியான அ.சா.2 எதிரிகள் 5 பேரும் அ.சா.1-யை தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக சம்பவம் குறித்து அ.சா.1,2 ஆகியோரின் சாட்சியம் முரண்பாடாக உள்ளது. எனவே விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையீடு செய்ய போதிய முகாந்திரம் இருப்பதாக இந்த நீதிமன்றம் தீர்மானித்து அவ்வாறே 1ம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள் 147,325,506(1)-ன் கீழான குற்றச்சாட்டுக்களும், 2,3 எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவுகள் 147,341,323-ன் கீழான குற்றச்சாட்டுக்களும், 4 முதல் 6 எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவுகள் 147,341-ன் கீழான குற்றச்சாட்டுக்களும் அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறி விட்டதாக இந்த நீதிமன்றம் தீர்மானித்து இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கது என்று பிரச்சினை எண்.1-க்கு தீர்வு காணப்படுகிறது.

9. <u>பிரச்சினை எண்.2:</u>

விசாரணை நீதிமன்றம் 1ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 147,325-ன் கீழ் குற்றவாளி என்றும், 2 முதல் 6 எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 147,341-ன் கீழ் குற்றவாளிகள் என்றும் முடிவு செய்து 1ம் எதிரிக்கு இ.தச..பிரிவு 325-ன் கீழான குற்றத்திற்கு ஒரு வருடம் கடுங்காவல் சிறைத்தண்டணையும், அபராதம் ரூ,500-00ம் கட்டத்தவறினால் ஒரு மாதம் கடுங்கால் சிறைத்தண்டணையும், 1 முதல் 6 எதிரிகளுக்கு இ.தச.பிரிவு 147-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.500-00ம் கட்டத்தவறினால் தலா ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டணையும், 2 முதல் 6 எதிரிகளுக்கு இ.த.ச.பிரிவு 341-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் தலா ரூ.200-00ம் கட்டத்தவறினால் தலா இரண்டு வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டணை விதித்தும் தீர்ப்பளித்து, 1ம் எதிரி இ.த.ச.பிரிவு 506(1)-ன் கீழும், 2,3 எதிரிகள் இ.த.ச.பிரிவு 323-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து அவர்களை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது. ஏற்கனவே பிரச்சினை எண்.1-ல் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்துள்ள நிலையில், விசாரணை நீதிமன்றம் 1ம் எதிரிக்கு இ.த.ச.பிரிவு 325-ன் கீழ்

வழங்கியுள்ள சிறைத்தண்டனையும், இ.த.ச.பிரிவு 147-ன் கீழ் விதித்துள்ள அபராதமும், 2 முதல் 6 எதிரிகளுக்கு இ.த.ச.பிரிவுகள் 147,341-ன் கீழ் விதித்துள்ள அபராதமும் நீக்கறவு செய்யத்தக்கது என்று பிரச்சினை எண்.2-க்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு விசாரணை நீதிமன்றம் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.13/2010 வழக்கில் 16-12-2017 ஆம் தேதியன்று வழங்கியுள்ள தீர்ப்பும், தண்டனையும் நீக்கறவு செய்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. 1ம் எதிரி இ.த.ச.பிரிவுகள் 147,325-ன் கீழும், 2 முதல் 6 எதிரிகள் இ.த.ச.பிரிவுகள் 147,341-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து அவர்களை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 6 எதிரிகள் விசாரணை நீதிமன்றத்தில் செலுத்தியுள்ள அபராதத் தொகையை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அவர்களுக்கு திருப்பி கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ஆம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
பழனி.

<u>இந்த மேல்முறையீட்டில் விசாரிக்கப்பட்ட சாட்சி,</u>
<u>சான்றாவணங்கள்</u>: இல்லை.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
பழனி.

Addl.District & Sessions Court,
Palani. C.A.No.01/2018.
Judgment/Dt.05/10/2018.